## முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**எம்.சி.ஓ.பி. எண். 36/2025**

**ம.சா. 1**

நாள்: 25.02.2026

2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்துமாரி | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

முதன்மை விசாரணை:

நான் இம்மனுவில் 1ம் மனுதாரர். எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

ஆவணங்கள்

| வ.எண் | தேதி | ஆவணங்கள் | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1) | 29.01.2023 | ம.சா.ஆ.1 | விபத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை | சான்றிட்ட நகல் |
| 2) | 04.05.2023 | ம.சா.ஆ.2 | இறுதி அறிக்கை | சான்றிட்ட நகல் |
| 3) | 30.01.2023 | ம.சா.ஆ.3 | என் மகன் அருணின் பிரேத பரிசோதனை அறிக்கை | சான்றிட்ட நகல் |



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.02.25 17:25:26 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 4) | 25.02.2023 | ம.சா.ஆ.4 | என் மகன் அருணின் இறப்பு சான்றிதழ் | ஜெராக்ஸ் நகல் |
| 5) | 01.10.2024 | ம.சா.ஆ.5 | என் மகனின் வாரிசு சான்றிதழ் | ஜெராக்ஸ் நகல் |
| 6) | 30.01.2023 | ம.சா.ஆ.6 | இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து சென்ற முருகேசனின் பிரேத பரிசோதனை அறிக்கை | சான்றிட்ட நகல் |
| 7) | 13.02.2023 | ம.சா.ஆ.7 | TN 65 AY 0338 பதிவு எண் கொண்ட ஆட்டோவின் விபத்து ஆய்வு அறிக்கை | சான்றிட்ட நகல் |
| 8) | -- | ம.சா.ஆ.8 | வரைபடம் | சான்றிட்ட நகல் |
| 9) | -- | ம.சா.ஆ.9 | எனது குடும்ப அட்டை | ஜெராக்ஸ் நகல் |
| 10) | -- | ம.சா.ஆ.10 | மனுதாரர்களின் ஆதார் அட்டை (3 எண்ணம்) | ஜெராக்ஸ் நகல் |
| 11) | -- | ம.சா.ஆ.11 | மனுதாரர்களின் பான் கார்டு (3 எண்ணம்) | ஜெராக்ஸ் நகல் |
| 12) | -- | ம.சா.ஆ.12 | மனுதாரர்களின் வங்கிக்கணக்கு பாஸ் புத்தகம் (3 எண்ணம்) | ஜெராக்ஸ் நகல் |
| 13) | 01.09.2025 | ம.சா.ஆ.13 | என் மகன் அருணின் சம்பள சான்றிதழ் | அசல் |

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் மகன்தான் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்றால் சரிதான். முருகேசன் பின்னார் அமர்ந்து சென்றார் என்றால் சரிதான். என் மகனின் லைசன்ஸ்ஸை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முன்னால் சென்ற ஆட்டோவின் பின்புறம் மோதித்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.25 17:25:31 +0530

சரிதான். இந்த விபத்தால் ஆட்டோவில் பயணம் செய்தவர்களுக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். என் மகன் அதிவேகமாவும், அஜாக்கிரதையாகவும் இருசக்கரவாகனத்தை ஓட்டிச்சென்று, போக்குவரத்து விதிகளின் படி போதிய இடைவெளி கொடுக்காமல் முன்னால் சென்ற வாகனம் வேகத்தை குறைத்த போது, பின்னால் சென்ற என் மகன் தான் ஓட்டிச்சென்ற வாகனத்தின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் ஆட்டோவின் பின்பகுதில் மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் ஆட்டோவில் அனுமதிக்கப்பட்ட நபர்களை விட அதிகமாக ஏற்றிக்கொண்டு சென்றார் என்றால் எனக்குத் தெரியாது.

விபத்து சமயத்தில் என் மகனும், முருகேசனும் தலைக்கவசம் அணியவில்லை என்றால் எனக்குத் தெரியாது. தலைக்கவசம் அணியாததால்தான் அவர்களுக்கு தலையில் காயம் ஏற்பட்டு இறப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்மந்தமாக சென்னை City small cause – 5 நீதிமன்றத்தில் MCOP No.2786/2023 என்ற இழப்பீடு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அந்த வழக்கு சரியாக நடத்தாமல் தள்ளுபடி ஆகிவிட்டது. ஒரே விபத்திற்கு இரண்டு நீதிமன்றங்களில் இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்துள்ளதால், இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்ட விவரங்களை மறைத்து இந்த மனு தாக்கல் செய்துள்ளதால், இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்தானது 29.01.2023 ல் நடந்தது என்றால் சரிதான். இந்த மனு காலவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 3ம் மனுதாரர் தனியாக இருந்து, சம்பாதித்து வருகிறார் என்றால் சரிதான். ஆனால் அவருக்கு உடல்நிலை சரியில்லை. எனக்கு எதுவும் கொடுக்கமாட்டார்.

என் மகன் அருணின் சம்பள சான்று ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. என் மகன் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமல்,



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.25 17:25:35 +0530

வாகனத்தை ஓட்டி விபத்தை வழிய ஏற்படுத்திக்கொண்டார் என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பிடு வழங்க கடமைப்படவில்லை என்றும் சொல்வது சரியல்ல. பல்வேறு இனங்களில் நான் கோரியுள்ள இழப்பீடு தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல. மனுவானது 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. என் மகன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்திற்கு பதிவு சான்றோ, காப்பீடோ இல்லை என்றால் சரியல்ல.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த விபத்திற்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

**மறு விசாரணை – இல்லை.**

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.02.25 17:25:40 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .